முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திரு. பா. கௌதமன், பி.ஏ.,பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி

ம..சா.1 நாள் 25.02.2020

| | | | |
|---|---|---|---|
| எம்.சி.ஒ.பி.எண். | 13/2019 | | |
| பெயர் | முகமது ஹாலித் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எனது மகன் இறப்பிற்காக நஷ்ட ஈடு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன். 06.02.2007 அன்று எனது மகன் காலமானார். சுமார் 12 ஆண்டுகளாக நான் இழப்பீடு கோரி எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முகமது சித்திக் எனது சித்தப்பா. அவர் தான் விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அவர் வடகால் ஜமாத்தில் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் இல்லை. அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் புதுப்பட்டிணம் காவல் நிலைய குற்ற எண் 285/2007 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் சீர்காழி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சிசி 188/2008 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு எனது மனைவி சாட்சியம் அளித்தார் என்றால் சரிதான். அதில் என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த வழக்கில் சாட்சியம் அளித்த ராமசாமி எனது மகன் தான் வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. ராமசாமி போலிஸ் விசாரணையில் எனது மகன் தான் வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அந்த விபரத்தை எனது மகன் மயக்க நிலையில் இருந்த போது கேட்டு தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த விபரத்தை ஆய்வாளர் கலைமணி தனது சாட்சியத்தில் ஒப்புக் கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. குற்ற வழக்கில் விசாரிக்கப்பட்ட மேலும் 2 சாட்சிகளும் எனது மகன் தான் வாகனத்தை ஓட்டி சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாகனத்தை யார் ஓட்டி சென்றது என்பது குறித்து தெளிவான சாட்சியங்கள் இல்லாததால் பாபு நிரபராதி என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இதே விபத்தில் பாபுவிற்கு காயங்கள் ஏற்பட்டு தற்போது உயிருடன்

உள்ளார். இரு சக்கர வாகனம் மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. எனது மகன் வாகனத்தை ஓட்டி சென்றதால் தான் மரத்தில் மோதி ஏற்பட்ட காயத்தில் எனது மகன் இறந்து போனார் என்றாலும் பின்னால் அமர்ந்து சென்ற பாபு தூக்கி எறியப்பட்டு காயங்களுடன் தற்போது உயிருடன் உள்ளார் என்றாலும் சரியல்ல. விபத்திற்கு பிறகு எனது மகனையும் பாபுவையும் ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பாபு காயம்பட்டு சிதம்பரம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததை பயன்படுத்திக் கொண்டு எனது சித்தப்பா ஜமாத் தலைவராக இருந்ததால் பாபு மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து வாகனத்தை எனது மகன் தான் வாங்கி ஓட்டி சென்றார் என்றாலும் வாகனத்தின் பின்னால் 1ம் எதிர்மனுதாரரின் மகன் பாபு அமர்ந்து சென்றார் என்றாலும் சரியல்ல. எனது மகன் 1989 ல் பிறந்தார். 12ம் வகுப்பில் வேதியியல் பாடப்பிரிவில் பயின்றார். மேற்படிப்பிற்கு செல்வதாக இருந்த போது விபத்து நடந்தது. எனது மகன் விபத்து தேதியில் சேல்ஸ் மேனாக வேலை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மளிகை கடையில் எனது மகன் வேலை பார்த்தார். எனது சித்தப்பாவை போலிசார் விசாரித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு எனது சித்தப்பா காலமானார். எனது சித்தப்பா போலிஸ் விசாரணையில் விபத்து பற்றி ராமசாமியிடம் விசாரித்ததாகவும் ராமசாமி சொன்னதை வைத்து புகார் கொடுத்ததாகவும் சொன்னார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து பாபு இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. எனது மகன் இறந்து விட்டதாலும் பாபு உயிரோடு இருந்ததாலும் சித்தப்பாவின் செல்வாக்கை பயன்படுத்தி பாபு மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் வாகனத்தை ஓட்டி சென்றதால் தான் 12 ஆண்டுகளாக நான்இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் காவல் நிலையத்திலிருந்து கொடுக்கப்பட்ட குறிப்பாணையின் அடிப்படையில் வாகனத்தை ஓட்டியது பாபு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாபுவிற்கு விபத்து சமயத்தில் 17 வயது என்றாலும் அவருக்கு வாகனம் ஓட்டத் தெரியாது என்றாலும் வாகனத்தை அவர் ஓட்டவில்லை என்றாலும் சரியல்ல. விபத்து நடந்தவுடன் எனது மகன் இரு சக்கர வாகனத்தின் மீது கிடந்ததாகவும் பாபு தூக்கி எறியப்பட்டு வேறு இடத்தில் கிடந்ததாகவும் காவல் துறை ஆவணங்களில் குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல. போலிசார் சரிவர விசாரணை செய்யாமல் 1ம்எதிர்மனுதாரரின் மகன் மீது வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது மகன் தான் காரணம் என்றாலும் நான் நஷ்ட ஈடு கோர இயலாது என்றாலும் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவத்தை நேரடியாக யாரும் பார்க்கவில்லை. பாபுவிற்கு மட்டும் தான் விபத்து பற்றி தெரியும். எனது மகனுக்கும் பாபுவிற்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது மகன் மளிகை கடையில் வேலை பார்த்தார் என்பதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனது மகன் மாதம் ரூ.15,000/- சம்பாதித்ததாக சொல்வதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனது மகன் வாகனத்தை ஓட்டி சென்று பனைமரத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால் 1ம் எதிர்மனுதாரரோ 2ம ் எதிர்மனுதாரரோ நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.